செ.வெ.எண் : 03/மே நாள்:04.05.2020

**இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்**
**கொரோனா பரிசோதனை மையம் ஏற்படுத்திட ஒப்புதல்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

இராமநாதபுரம், வண்டிக்காரத் தெரு பகுதியில், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் கண்காணிப்பு மண்டலக்குழு சிறப்பு அலுவலர் திரு.சி.காமராஜ்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஆய்வு செய்து, நடமாடும் மாதிரி சேகரிப்பு மையத்தை இன்று (04.05.2020) துவக்கி வைத்து பார்வையிட்டனர்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 2,642 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 20 நபர்களுக்கு கொரோனா தொற்று உள்ளது எனவும், 2,545 நபர்களுக்கு தொற்று இல்லை எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 77 நபர்களுக்கான பரிசோதனை முடிவுகள் வரவேண்டியுள்ளது. வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் அனைவரும் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மருத்துவர்களின் சிறப்பான சிகிச்சையின் மூலமாகவும், சிகிச்சை பெற்றவர்களின் முழு ஒத்துழைப்பின் காரணமாகவும் இதுவரை 11 பேர் பூரண குணமடைந்து அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 9 பேருக்கு தொடர்ந்து சிகிச்சை வழங்கப்பட்டு, அவர்களது உடல்நிலை சீராக உள்ளது.

மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள 10 உள்ளாட்சி பகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்தி தொற்று பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளைச் சுற்றி சுமார் 5 கி.மீ. சுற்றுவட்டாரத்தில் மொத்தம் 14 கட்டுப்பாட்டு பகுதிகள் (Containment Zone) ஏற்படுத்தப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் சுகாதாரத்துறை பணியாளர்கள் மூலம் ஒவ்வொரு வீடாக பொதுமக்களுக்கு நோய் அறிகுறி குறித்து தொடர்ந்து 14 நாட்களுக்கு களஆய்வுப்பணி மேற்கொள்ளப்படுகிறது. இப்பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்குத் தேவையான காய்கறி, பால் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய உணவுப் பொருட்கள் நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதிகளில் உள்ளாட்சித் துறையின் மூலம் தினந்தோறும் காலை மாலை என இரு வேளையில் கிருமி நாசிணி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், தமிழ்நாடு அரசு தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள முழு ஊரடங்கில் சில அத்தியாவசிய பணிகளுக்கு தளர்வு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றிட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zone) எவ்வித தளர்வும் இல்லை. இதனை முழுமையாக கண்காணித்திட காவல்துறை, வருவாய் துறை மற்றும் பொது சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. 144 தடை உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் தேவையற்ற பயணங்களை முற்றிலும் தவிர்த்திட வேண்டும். மேலும், இராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா பரிசோதனை மையம் ஏற்படுத்திட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிக அளவில் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை மேற்கொள்ளவும், முடிவுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பாக அமைந்துள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, இராமநாதபுரம், வண்டிக்காரத் தெரு பகுதியில், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் கண்காணிப்பு மண்டலக்குழு சிறப்பு அலுவலர் திரு.சி.காமராஜ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான நடமாடும் மாதிரி சேகரிப்பு மையத்தை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இந்த நிகழ்வின்போது, இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., இராமநாதபுரம் சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.சி.அஜித் பிரபுகுமார், நகராட்சி ஆணையாளர் திரு.என்.விஸ்வநாதன், காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கி.வெள்ளத்துரை, வட்டாட்சியர் திரு.முருகவேல் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**